தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக

# நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!



16 - 12 - 2025

**புதுடெல்லி, டிச. 17 -**

**நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் 1.12.2025 அன்று தொடங்கியது. இத்தொடரில் மக்களவை, மாநிலங்களவை இரு அவைகளிலும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக முன்னேற்றத்திற்காக நேற்று (16.12.2025) எழுப்பிய கேள்விகள் வருமாறு:**

**1. பட்டியல் சாதி/பழங்குடியின மாணவர்களுக்கான விடுதி வசதிகளை மேம்படுத்துக!**

**ஆ. இராசா**



கடந்த ஐந்து ஆண்டுகளில் பட்டியலில் சாதி/பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விடுதி வசதிகள் குறித்த விவரங்கள் கேட்டு திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார். மேற்கண்ட காலகட்டத்தில் விடுதிகள் கட்டுவதற்கும் பராமரிப்பதற்கும் தனித்தனியாக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி விவரங்கள், மேற்கண்ட காலகட்டத்தில் அந்த விடுதிகளில் தங்கியுள்ள பட்டியலில் சாதி/பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உபகரணங்களுக்கான மானியங்கள் குறித்த விவரங்கள், மேற்கண்ட காலகட்டத்தில் பட்டியலில் சாதி/பழங்குடியின மாணவர்களுக்கான விடுதி வசதிகளின் தரம் ஆகியவற்றை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள், விடுதி வசதிகளில் உள்ள குறைபாடுகள் குறித்து புகார்கள் பெறப்பட்டுள்ளனவா, ஆம் எனில், அதன் விவரங்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**2. தமிழ்நாட்டிலிருந்து நெல் கொள்முதல் விவரங்கள் என்ன?**

**திருச்சி சிவா**



நெல் விவசாயிகளில் 17% பேர் மட்டுமே குறைந்தபட்ச மானிய விலை (MSP) கொள்முதல் மூலம் பயனடைகிறார்களா என்றும் இதுவரை பயனடைந்த விவசாயிகளின் விவரங்கள் குறித்தும் திருச்சி சிவா கேள்வி எழுப்பியுள்ளார். 2024-25 காரீஃப் பருவத்தில் (KMS) நெல் கொள்முதல் செய்யப்பட்ட 74,168 விவசாயிகளுக்கு குறைந்தபட்ச மானிய விலை (MSP) நிதி வழங்கப்படாதது ஏன்? பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் மாறிவரும் வானிலை முறைகளைக் கருத்தில் கொண்டு, நெல்லில் உள்ள ஈரப்பதத்தின் அளவுக்கான தர நிர்ணய விதிகளைத் தளர்த்தாதது ஏன்? கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் விவரங்கள் என்ன? எனும் கேள்விகளுக்கும் அவர் பதில் வேண்டியுள்ளார்.

**3. ஓபிசி, எஸ்.சி, எஸ்.டி சமூகங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் ஒன்றிய அரசால் இழைக்கப்படும் அநீதிகள் குறித்து நாடாளுமன்ற மாநிலங்களவையில் பி.வில்சன் உரை!**



எட்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டது. எட்டு ஒன்றிய நிதிநிலை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுவிட்டன.. வாழ்க்கைச் செலவு விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துவிட்டது. பணவீக்கமானது ரூபாயின் மதிப்பை சிதைத்துவிட்டதோடு, பொருளாதார சூழ்நிலைகள் வியத்தகு அளவில் மாறிவிட்டன. இருப்பினும் ஓபிசி கிரீமி லேயரைத் தீர்மானிப்பதற்கான வருமான உச்ச வரம்பு ஆண்டுக்கு எட்டு இலட்சம் என்கிற அளவிலேயே இருக்கிறது. 2017 ஆம் ஆண்டில் தங்கம் ஒரு கிராமுக்கு 3,000 ஆக இருந்தபோது இந்த வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் தங்கத்தின் இன்றைய மதிப்போ ஒரு கிராமுக்கு 12,000 எனும் அளவில் 400% அதிகரித்துள்ளது.

கிரீமி லேயர் உச்சவரம்பானது ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையும் மாற்றியமைக்கப்பட வேண்டும். அந்த வகையில் இரண்டு முறை செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் செய்யப்படாமல் தாமதப்படுத்தப்பட்டு விட்டது.

தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையமானது இந்த உச்சவரம்பை உயர்த்திட பரிந்துரைத்த நிலையிலும், ஒன்றிய அரசாங்கமானது அதனை ஏற்றுக்கொள்ளாமல் புறந்தள்ளிவிட்டது.

ஒரு விண்ணப்பதாரரின் குடும்ப வருமானத்தைக் கணக்கிடும் போது, ஊதியத்தையும் சேர்த்துக் கணக்கிடும் ஒன்றிய பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் நடைமுறை பாகுபாடானதாகும்.

பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இந்தச் சட்டவிரோத நடைமுறை பின்பற்றப்படுகிறது. அதுமட்டுமின்றி யூபிஎஸ்சி அமைப்பும் இதையே செய்கிறது.

இத்தகைய நடைமுறைகள், சம்பள வருமானமும் விவசாய வருமானமும் கிரீமி லேயர் கணக்கீட்டில் சேர்க்கப்படக் கூடாது என்று தெளிவாகக் கூறும் 1993 ஆம் ஆண்டின் அலுவலக குறிப்பாணைக்கு முற்றிலும் எதிரானவை.

இதன் காரணமாக, UPSC தேர்வுகள் மூலம் நடைபெறும் நியமனங்களிலும், கல்வி நிறுவனங்களிலும் வழங்கப்படும் இடஒதுக்கீட்டை பெற முயற்சிக்கும் விண்ணப்பதாரர்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. அரசாங்கமானது தனது கடமையை சரிவர செய்யாத நிலையில், விண்ணப்பதாரர்கள் பாதிக்கப்படுவது கவலைக்குரியதாகும்.

கிரீமி லேயர் முறை சீரமைப்பதற்கான பாராளுமன்றக்குழுவானது, 2019 ம் ஆண்டு அளித்த அறிக்கையில்

இந்த நடைமுறையை கடுமையாக கண்டித்ததுடன், உடனடியாக அதை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

எனினும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இத்தகைய சட்டவிரோதமான நடவடிக்கைகளினால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைகளைப் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது. எட்டு ஆண்டுகளாக மாற்றியமைக்கப்படாத இந்த வரம்பும் மற்றும் சட்டவிரோத நடைமுறையினால் மத்திய பல்கலைக்கழகங்களில் உள்ள OBC பேராசிரியர் பணியிடங்களில் சுமார் 80% காலியாகவே உள்ளது.

மத்திய பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்பட்ட 2537 பேராசிரியர் பணியிடங்களில், 423 பணியிடங்கள் (16.67%) மட்டுமே OBC சமூகத்தினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அப்படியானால், அரசியலமைப்புச் சட்டப்படி கட்டாயமாக வழங்கப்பட வேண்டிய 27% இடஒதுக்கீடு எங்கே போனது?

21 IIT , 13 IIM களில் இருந்து தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட பதில்களின் படி,

21 IIT களில், வெறும் 11.2% பேராசிரியர்கள் மட்டுமே ஓபிசி சமூகத்தைச் சார்ந்தவர்கள். அதே போன்று 6% பேர் எஸ்.சி. சமூகத்தையும், 1.6% பேர் எஸ்.டி.சமூகத்தையும் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

13 IIM களில், இந்த விகிதம் இன்னும் குறைவாக இருக்கிறது. வெறும் 9.6% பேராசிரியர்கள் ஓபிசி வகுப்பைச் சார்ந்தவர்களாகவும், 5% பேர் எஸ்.சி வகுப்பைச் சார்ந்தவர்களாகவும், 1% பேர் எஸ்.டி வகுப்பைச் சார்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஏறத்தாழ 2 IIT-களிலும் 3 IIM-களிலும், பேராசிரியர் பணியிடங்களில் 90%-க்கும் அதிகமானவை பொதுப் பிரிவினர் வசமே உள்ளது. 8 IIT க்கள் மற்றும் 7 IIM களில் 80% அதிகமான பேராசியர்கள் பொதுப்பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இது IIM கல்வி நிறுவனமா அல்லது பொதுப்பிரிவினருக்கான பிரத்யேக மையமா என்ற கேள்வி எழுகிறது.

ஒன்றிய அரசின் பணியாளர் நியமன முறையில் இந்த உச்சவரம்பின் தாக்கம் தெளிவாகத் தெரிகிறது.

தற்போதைய குரூப் A அதிகாரிகளில் 18.07% மட்டுமே OBC வகுப்பைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர்.

ஒன்றிய அரசின் முக்கியமான 90 உயர்மட்ட நிர்வாக அதிகாரிகளில், OBC சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று பேர் மட்டுமே உள்ளனர்; அவர்களுக்கும் கூட ஒப்பீட்டளவில் குறைந்த முக்கியத்துவம் கொண்ட துறைகளே ஒதுக்கப்பட்டுள்ளன.

பணியாளர் நியமன திட்டத்தின் மூலம் ஒன்றிய அரசின் பல்வேறு அமைச்சகங்களில் பணியாற்றும் 322 அதிகாரிகளில், 16 பேர் எஸ்.சி வகுப்பையும்,, 13 பேர் எஸ்.டி வகுப்பையும், 39 பேர் ஓபிசி வகுப்பையும் சார்ந்தவர்கள்.. மாறாக 254 பேர் உயர் சாதியினரைச் சேர்ந்தவர்கள்.

இப்படியான சூழ்நிலையில், ஒன்றிய அரசின் பணிகளுடைய நேர்முகத்தேர்வுகளின் போது, சரியான நபர் காணப்படவில்லை என்ற பதத்தை பயன்படுத்தியோ அல்லது முறைகேடான ரோஸ்டர் முறையின் வழியாகவோ, SC / ST / OBC வகுப்பைச் சார்ந்தவர்கள் அடிக்கடி திட்டமிட்டு நிராகரிக்கப்படுகின்றனர்.

இதுதான் சமூக நீதியா?

இந்தியா என்பது திறமையை மதிக்கும் நாடு என்று சொல்லப்படுகிறது.

ஆனால் OBC, SC, ST வகுப்பை சார்ந்தவர்கள் பணிகளுக்கு விண்ணப்பிக்கும் தருணத்திலேயே அந்த ‘திறமை’ என்ற அளவுகோல் செயலிழந்துவிடுவது போலவே தெரிகிறது.

2014 முதல் ஒவ்வொரு விஷயத்திற்கும் கால நீட்டிப்பு செய்யப்படுவதைத் தவிர SC/ST/OBC சமூகத்தின் நலன்களுக்காக எந்தவொரு சட்டமும் இயற்றப்படவில்லை.

எனவே, அரசியலமைப்பு திருத்தங்களின் மூலம் ஓபிசி கிரீமி லேயரைத் தீர்மானிப்பதற்கான வருமான உச்சவரம்பினை உயர்த்திடவும், கிரீமி லேயர் கணக்கீட்டில் உள்ள பாகுபாடான நடைமுறைகளை நீக்கவும், காலியாக உள்ள பணியிடங்களை ஒதுக்கீட்டின் அடிப்படையில் உடனடியாக நிரப்பவும், OBC, SC, மற்றும் ST சமூகத்தின் மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்றார் போல இடஒதுக்கீட்டை உயர்த்திடவும், மாண்புமிகு பிரதமர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**4. தொடர்ந்து உயரும் உணவுப் பொருட்களின் விலை. சமாளிக்க இயலாத ஒன்றிய அரசு!**

**ஆர். கிரிராஜன்**



நாட்டில் சில்லறை மற்றும் உணவுப் பணவீக்கம் மிக அதிக சதவீதத்திற்கு உயர்ந்துள்ளது என்பதை அரசாங்கம் அறிந்திருக்கிறதா என்றும் அதைக் குறைக்க அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்வு நடவடிக்கைகள் என்ன என்றும் ஆர். கிரிராஜன் எம்.பி. கேட்டுள்ளார். பருப்பு வகைகள், வெங்காயம், பழங்கள், காய்கறிகள் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற வேளாண்-தோட்டக்கலைப் பொருட்களின் விலைகளில் உள்ள ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்த, நிலையான விலை நிர்ணயிக்கும் நிதியிலிருந்து (PSF) அரசாங்கம் போதுமான நிதியை ஒதுக்கியுள்ளதா என்றும் அவர் கேட்டுள்ளார். மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதீத உயர்வைச் சமாளிக்க அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் யாவை? எனவும் கேட்டுள்ளார்.

**5. ஜிஎஸ்டி திருத்தத்தினால் ஏற்படும் நஷ்டத்திற்கு இழப்பீடு வேண்டும்!**

**கே.ஆர்.என். ராஜேஷ்குமார்**



ஜிஎஸ்டி2.0-இன்கீழ் முன்மொழியப்பட்ட ஜிஎஸ்டி திருத்தத்தினால் ஏற்படும் வருவாய் இழப்புகளுக்குத் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என நாடாள்:உமன்றத்தில் திமுக எம்.பி. கே.ஆர். என் ராஜேஷ்குமார் கேட்டுள்ளார்.

சிறு வணிகங்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்காக ஜிஎஸ்டி திருத்தங்களைச் செயல்படுத்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? சமீபத்திய ஜிஎஸ்டி திருத்தங்களின் பின்னணியில், தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குத் தடையற்ற கடன் மற்றும் நிதி உதவியை உறுதிசெய்யத் திட்டமிடப்பட்ட/எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்றும் அவர் கேட்டுள்ளார்.

**6. பிரசவத்தில் தாய்-சேய் உயிரிழப்புகளை தடுக்கிறதா ஜனனி சுரக்ஷா திட்டம்?**

**ராஜாத்தி சல்மா**



பிரசவத்தில் ஏற்படும் தாய் சேய் உயிரிழப்புகளை தடுக்க நிதியுதவி செய்ய உருவாக்கப்பட்ட ஜனனி சுரக்ஷா யோஜனா (JSY) திட்டத்தின் கீழ் மாநில வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, வழங்கப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவிகள் என்ன? தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைந்த பெண்களின் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் உட்பட எண்ணிக்கை என்ன? ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ் ஆஷா பணியாளர்களின் பொறுப்புகள் குறித்து தெளிவான வழிகாட்டுதல்களை அரசாங்கம் எப்போது வெளியிடும்? எனும் பல்வேறு கேள்விகளை மாநிலங்களவையில் திமுக உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேட்டுள்ளார்.

**7. பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் இறக்குமதியைக் குறைத்து உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துக!**

**அரக்கோணம் எஸ். ஜெகத்ரட்சகன்**



கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டில் பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் மொத்த உற்பத்தி அளவு, மற்றும் மத்திய முகமைகளால் குறைந்தபட்ச மானிய விலையில் (MSP) கொள்முதல் செய்யப்பட்ட அளவு ஆகிய விவரங்கள் கேட்டு திமுக மக்களவை உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி எழுப்பினார். அதன் விவரங்கள்:

அதே காலகட்டத்தில், ஆண்டுவாரியாக இறக்குமதி செய்யப்பட்ட பயறு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய்களின் மொத்த அளவு மற்றும் மதிப்பு என்ன? இந்தியா பயறு வகைகளை உற்பத்தி செய்யும் மிகப்பெரிய நாடாக இருந்தபோதிலும், பயறு வகைகளின் இறக்குமதி தொடர்ந்து அதிகமாக இருப்பதற்கான காரணங்கள் என்ன? பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கவும், இறக்குமதியைக் குறைக்கவும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**8. விவசாயிகளிடையே திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள் என்ன?**

**தருமபுரி அ. மணி**



விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகளில் விவசாயிகளிடையே திறன் மேம்பாடு, திறனை வளர்த்தல் மற்றும் பயிற்சி ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் விவரங்களை மக்களவையில் திமுக உறுப்பினர் அ. மணி கேட்டுள்ளார். அவை:

கடந்த ஐந்து ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் நடத்தப்பட்ட குறிப்பிட்ட முன்முயற்சிகள், பயிற்சித் தொகுதிகள், வெளிப்பாட்டுப் பயணங்கள், விவசாயப் பண்ணைப் பள்ளிகள் மற்றும் டிஜிட்டல் வேளாண் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் யாவை? இந்தத் திறன் மேம்பாட்டுத் திட்டங்களால் தருமபுரி மாவட்டத்தில் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை என்ன? தருமபுரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்காக, குறிப்பாக நவீன விவசாய நுட்பங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்பு மேம்பாடு மற்றும் அது சார்ந்த துறை பல்வகைப்படுத்தல் ஆகியவற்றில் திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் முன்மொழியும் புதிய திட்டங்கள் என்ன?

**9. மாதவிடாய் சுகாதாரத் திட்டம் - பயன் தருகிறதா அவுஷிதி சுவிதா திட்டம்?**

**ராஜாத்தி சல்மா**

கடந்த ஐந்து ஆண்டுகளில் மாதவிடாய் சுகாதாரத் திட்டத்திற்காக மாநில வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட நிதிகள் குறித்த விவரங்கள் வேண்டும் மற்றும் தமிழ்நாட்டில் மாதவிடாய் சுகாதா ரத் திட்டம், சுகாதார நாப்கின்கள் கொள்முதல், விநியோகம் மற்றும் ஜன் அவுஷதி சுவிதா பேட்களின் பயன்பாட்டு விகிதம் குறித்த விவரங்கள் கேட்டு மாநிலங்களவையில் திமுக உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார்.

**10. கேரள வேர் வாடல் நோயால் பாதிக்கப்பட்ட தென்னைத் தோட்டங்களின் மதிப்பிழப்புகள் என்ன?**

**பொள்ளாச்சி. கே. ஈஸ்வரசாமி எம்.பி.**



தமிழ்நாட்டின் சில பகுதிகளில் தென்னைத் தோட்டங்களைப் பாதிக்கும் கேரள வேர் வாடல் நோயின் கடுமையான பாதிப்புக்குள்ளான பகுதியின் அளவு மற்றும் மதிப்பிடப்பட்ட இழப்புகள் என்ன என பொள்ளாச்சி எம்.பி. கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார். தென்னை மரத்தை காக்க காப்பீட்டுத் திட்டம் அல்லது வேறு ஏதேனும் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா? கடந்த ஐந்து ஆண்டுகளில் தென்னை மரக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை, தீர்க்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் விநியோகிக்கப்பட்ட மொத்த நிதி எவ்வளவு? பாதிக்கப்பட்ட பகுதிகளில் நோய் கண்காணிப்பை வலுப்படுத்தவும், நிதி நிவாரணம் வழங்கவும் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட தென்னை வகைகளை ஊக்குவிக்கவும் அரசால் பரிசீலிக்கப்படும் திட்டங்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**11. விவசாய நிலங்கள் மற்ற காரணங்களுக்காக கையகப்படுத்துவதை தடுக்க நடவடிக்கை என்ன?**

**கணபதி ராஜ்குமார்**



சமீபகாலமாக, நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு போன்ற பல்வேறு நோக்கங்கள்/பயன்பாடுகளுக்காகவும் தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்துவதற்காகவும் விவசாய நிலங்கள் கண்மூடித்தனமாக கையகப்படுத்தப்படுவதால், வளமான விவசாய நிலப்பரப்பு குறைந்து வருவது குறித்து கவலை தெரிவித்து அதற்கான காரணங்களையும் ஒன்றிய அரசிடம் கோவை திமுக உறுப்பினர் கணபதி ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார். நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பான விவசாயத்தையும் விவசாயிகளையும் பாதுகாக்கவும் எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை/பஞ்சத்தைத் தடுக்கவும் எதிர்காலத்தில் பல்வேறு உள்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்காக வளமான நிலம் பயன்படுத்தப்படுவதைக் கட்டுப்படுத்த ஒன்றிய அரசு உடனடியாகத் தேவையான நடவடிக்கை எடுக்குமா? என்றும் கேட்டுள்ளார்.

**12. ரேபிஸை ஒழிக்க தீவிரமாக செயல்படுமா ஒன்றிய அரசு?**

**எஸ்.ஆர். சிவலிங்கம்**



சமீபத்திய சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளுக்கு இணங்க, கருத்தடை, தடுப்பூசி மற்றும் சிகிச்சை மூலம் தெருநாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ரேபிஸை ஒழிப்பதற்காக ஒன்றிய அரசு செயல் திட்டம் வகுத்துள்ளதா என மாநிலங்களவையில் திமுக உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் செயலாக்க நிலை மற்றும் அடையப்பட்ட முன்னேற்றம் குறித்த விவரங்கள், அதிக அளவில் நாய் கடி மற்றும் வெறிநோய் பாதிப்புகள் பதிவாகும் பகுதிகளுக்குத் தீர்வு காண எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பாதுகாப்பான நாய் உணவுப் பழக்கவழக்கங்கள் குறித்தும், ரேபிஸ்சை கட்டுப்படுத்துவதில் வீடு மற்றும் தெருநாய்களுக்குத் தடுப்பூசி போடுவதன் முக்கியத்துவம் குறித்தும் குடிமக்களுக்குக் விழிப்புணர்வு ஏற்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவை? என அவர் கேட்டுள்ளார்.

---

தென்காசி மாவட்டம் – பாவூர் சத்திரம்

# இரயில்வே மேம்பாலத் திட்டத்தை ஒன்றிய அரசு நிறைவேற்றவில்லை!

## மக்களவையில் – மரு.ராணி ஸ்ரீ குமார் குற்றச்சாட்டு!

புதுடெல்ல,. டிச. 17 - தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் இரயில்வே மேம்பால திட்டத்தை ஒன்றிய அரசு நிறைவேற்றவில்லை என மக்களவையில் மரு.ராணி ஸ்ரீகுமார் குற்றச்சாட்டி னார்.

நாடாளுமன்ற மக்களவையில் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் பேசியதாவது.



தென்காசி மாவட்டத்தில் ஒன்றிய அரசின் உள்கட்டமைப்பு திட்டங்கள் மிகவும் கால தாமதமாகிறது.

பாவூர்சத்திரத்தில் இரயில்வே மேம்பாலத் திட்டத்தை ஒன்றிய அரசு நிறைவேற்ற வில்லை. இதனால் நெல்லை தென்காசி நான்கு வழி சாலையை பயன்படுத்தும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

மேலும் கொல்லம் திருமங்கலம் சாலையில் உள்ள இலஞ்சி மேம்பாலத் திட்டம் நிறை வேற்றப்படாததையும் சுட்டிக்காட்டி பேசினார்.

இவ்வாறு தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர்.ராணி ஸ்ரீகுமார் மக்களவையில் பேசியுள்ளார்.

---

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - எஸ்.முரளி பங்கேற்பு! கோவி.லெனின் முன்னிலை!

# 124 ‘அ’ வட்டத்தில் “என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி”!

## வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு வேண்டுகோள்!

சென்னை, டிச. 17- 124 ‘அ’ வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்குப் பகுதி 124 அ வட்டத்தில் லாலாத் தோட்டம் பாகம் 185, 186, புது தெரு பாகம் 170, 171 இல் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி இன்று (17.12.2025 - புதன்கிழமை) மாலை 7 மணிக்கு துவங்கப் பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் நமது சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட செயலாளர் மயிலை த. வேலு கலந்து கொள்கிறார்.

மயிலை தேர்தல் பொறுப்பாளர் கோவி. லெனின் முன்னிலை வகிக்கிறார்.

இதில் பகுதி செயலாளர் எஸ். முரளி மற்றும் மாமன்ற உறுப்பினர் வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட பகுதி வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் BLA2, BDO அனைத்து அணிகளை சார்ந்தோர் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு 124வது அ வட்ட பொறுப்பாளர் மா.பா.அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

பெருங்குடி மண்டலம், எல்.பி. சாலையில்

# கழிவுநீர்க் குழாய்கள் இணைக்கும் பணிகள்!

## மண்டலம் – 9,13 14 க்குட்பட்ட கழிவுநீர் உந்து நிலையம் செயல்படாது!

சென்னை,டிச.17- சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் (CMRL), பெருங்குடி மண்டலம், எல்.பி. சாலையில் உள்ள SRP Tools பேருந்து நிலையம் அருகில் பிரதான கழிவுநீர் குழாய் இணைக்கும் பணிகளை மேற்கொள்ளப்படவுள்ளதால் 19.12.2025 அன்று இரவு 10 மணி முதல் 20.12.2025 அன்று இரவு 10 மணி வரை (24 மணி நேரம்) மண்டலம் - 9 (தேனாம்பேட்டை), மண்டலம் - 13 (அடையாறு)க்குட்பட்ட கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் மண்டலம் - 14 (பெருங்குடி) எல்.பி. சாலை கழிவுநீர் உந்து நிலையம் தற்காலிகமாக செயல்படாது.

எனவே, தேனாம்பேட்டை, மற்றும் அடையாறு மண்டலங்களுக்குட்பட்ட இடங்களில் கழிவுநீர் தொடர்பான புகார்களுக்கு கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

வ. எண் மண்டலம் பகுதிப் பொறியாளர் கைபேசி எண்கள் கழிவுநீர் உந்து நிலையங்கள் 1. மண்டலம் 9 (தேனாம்பேட்டை) 8144930909 வடக்கு மைலாப்பூர் கழிவுநீர் உந்து நிலையம், தெற்கு மைலாப்பூர் கழிவுநீர் உந்து நிலையம், ஐஸ் அவுஸ் கழிவுநீர் உந்து நிலையம் 2. மண்டலம் 13 (அடையாறு) 8144930913 அடையாறு பழைய கழிவுநீர் உந்து நிலையம், அடையாறு புதிய கழிவுநீர் உந்து நிலையம், திருவான்மியூர் கழிவுநீர் உந்து நிலையம், இந்திரா நகர் கழிவுநீர் உந்து நிலையம், கோட்டூர்புரம் கழிவுநீர் உந்து நிலையம், காந்திநகர் கழிவுநீர் உந்து நிலையம், எல்.ஐ.சி காலனி கழிவுநீர் உந்து நிலையம், தந்தை பெரியார் நகர் கழிவுநீர் உந்து நிலையம்



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் சி.குமார் அவர்களில் புதிய இல்லத்தை ஒன்றிய செயலாளர் கும்மிடிப்பூண்டி கி.வேணுஆனந்த் தலைமையில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் திறந்து வைத்தார் இதில் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, மு.பகலவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, பா.செ.குணசேகரன், மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்